REGD No M 4642

# திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10 | 10—2—52 | இதழ் 32

# 'இந்து'வின் தொண்டு!

[அண்ணல்]

"தம்பியும் நானும் விரோதிகள்!" ன்றார், அவர், சிரித்த முகத்து ன். திடுக்கிட்டேன் நான்.

அண்மையில் நானும் நண்பர் ருணாநிதியும் சென்னையில் நண்ப ாருவர் இல்லத்துக்குச் சென்றி ந்தோம். அங்கே விசித்திரமான திப்பு ஒன்று நிகழ்ந்தது. எங் ் நண்பருடன், இன்னொருவர் மர்ந்திருந்தார். அவரைக் கண்ட மே, நாங்கள் புரிந்து கொண் டாம், யார் என்பதை. தன்னு டய கிராமீய கவிதைகள் மூலம், மிழுலகுக்கு அறிமுகமானவர். மிழக நகைச்சுவை வார இதழ் ன்றோடு தொடர்பு கொண்டவர். வரை, எங்களது நண்பர், அறி முகம் செய்து வைத்தார். அப் பாதுதான், அவர், சிரித்துக் காண்டே சொன்னார், 'நானும் ம்பியும் விரோதிகள்!' என்று. றிது நேரம், அவருடன், அள ளாவினேம்—தேர்தல் நிலை, அர பல் புயல், எதிர்காலம் ஆகியவை ள் குறித்து. பல ஐயங்களை அவர், ழுப்பினர்—விளக்கினேம். விடை பெற்றுச் செல்லும்போது, 'மிகமிக தவறுதலாகப் புரிந்துகொண்டிருந் தேன் உங்களைப்பற்றி. உண்மையில் வருந்துகிறேன்—உங்களைச் சந்திக் காவிடில் எனது தப்பெண்ணம் மாறாது! இந்தச் சந்திப்பு எனக் கோர் நல்வாய்ப்பு!" என்று மகிழ் வோடு, சென்றார்.

'தம்பியும் நானும் விரோதிகள்!' என்று, அவர் கூறியதற்கான, காரணத்தைப் பிறகுதான் தெரிந்து கொண்டோம். அவர்மட்டுமல்ல, அவரைச் சார்ந்த பலர், இன்னும் நம்மைபற்றித் தவறுதலாகத்தான் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்—தெரியுபபடி செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்களுக்கும், அந்த எழுத்தாள நண்பருக்கும், நடந்த உரையாடலில், சில பகுதி இது!

"உங்க, கொள்கைகள் நன்னாத் தெரியும் நேக்கு. ஜாதி ஒழியனும், சமமா வாழனும் என்கிறதிலே கொஞ்சங்கூட ஆட்சேபணை இல்லே — இதோ பாருங்கோ — நான் எங்கே வேணும்னாலும் சாப்பிடுவேன்! வித்யாசம் பாராட்டறது கூடாது—நாமெல்லாம் ஒரேஜாதி—அதாவது மனித ஜாதிங்கிற கருத்துக் கொண்டவன் நான். நான் மட்டுமில்லை, என்னைப்போல ஏராளமான பேர், இருக்கா—ஆனா, நீங்க நடந்துகிற போக்கினாலே அவாளெல்லாம்—பயப்படுறா! தப்பா நினைக்கிறா!"—இது, அவர்.

"என்ன நினைக்கிறார்கள் — நாங்கள் நடந்துகொள்வதில் எந்தமுறை தவறு?"—இது, நாங்கள்.

"பிராம்மணர்களைத் தூஷித்துப் பேசறேளே!"

"தவறானகருத்து. நாங்கள் பிராமணர்களைத் தூஷிப்பது கிடையாது—ஆனால் பிராமணீய முறைகளைக் கண்டிக்கிறோம் ஜாதி ஒழியவேண்டுமென்று சொன்னீர்கள் அது ஒழிய வேண்டும் என்றுதான் கூறுகிறோம். அப்படிக்கூறும்போது, ஜாதீய முறையால் ஏற்படும் கேடுகளை விளக்க வேண்டியதாகிறது. அப்போது, ஜாதி ஏற்பட்ட நிலை குறித்து பேச வேண்டியவர்களாகிறோம். உங்களையே கேட்கிறேன், ஜாதிமுறை இங்கேவேரூன்றிடக் காரணம் எது — பிராமணீய மதம் தானே!"

"உண்மை. அது தான்......"

"அந்த முறைகளைக் கண்டிப்பது தவறா?"

"தவறில்லைதான்—ஆனால் நீங்க பிராமணனைக் கண்டா, வெறுக்கிறாப்போல நடக்கனீயோ!"

"இங்கேயும் தவறு செய்கிறீர்கள். தனிப்பட்ட முறையில், எத்தனையோ பிராம்மணத் தோழர்கள், எங்களுக்கு நண்பர்களாக இருக்கிறார்கள். நாங்கள் கண்டிப்பது அவர்களை அல்ல—"

"சரி. திராவிடநாடு பெற்றால், எங்களையெல்லாம் விரட்டித்தானே விடுவீர்கள்!"

"எங்களைப்பற்றித் தவறாகப் புரிந்து கொள்ளும்படிச் செய்யப்பட்டிருக்கிறீர்கள். 'திராவிடநாடு' பெற்றால், அங்கே ஏழையும் பணக்காரனும் இருக்கமாட்டான்; மனி

தன் உலவுவான்! பிராமணனும்—பிராம்மணரல்லாதாரும் இருக்கமாட்டான்—மனிதன் உலவுவான்! வேற்றுமையில்லாத அந்தப்புது வாழ்வைக்காண விரும்புகிறோம்—பேதம் அங்கே இருக்காது.''

''அப்படியா?''

''இதுதான் நாங்கள் காண விரும்பி போராடிக்கொண்டிருப்பது. இந்த நிலையை நாங்கள் பல முறை விளக்கியிருக்கிறோம். கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு வந்ததே இந்தி நல்லெண்ணத் தூதுக் குழு, அவர்களைச் சந்தித்த போது எங்கள் பொதுச்செயலாளர் நன்கு விளக்கியிருக்கிறார்.''

''அப்படியா! எனக்குத் தெரியாதே''

''தெரிந்துகொள்ளும்படி நீங்கள் செய்யப்படவில்லை. செய்திகளைத் தரும் 'இந்து' 'மித்திரன்' 'தினமணி' போன்ற இதழ்கள், எங்களைப் பற்றி தவறான அபிப்பிராயங்களைப் பரப்புவதில் கவனம் செலுத்துகின்றனவேயொழிய, நாட்டின் எதிர்காலம்பற்றி நினைப்பதில்லையே!''

* * *

சாதிபேதம் ஒழிந்து, எல்லோரும் மனிதர்களாக உலவவேண்டும் என்கிற நமது எண்ணத்தைச் சரிவரப் பலர் புரிந்துகொள்ளாத காரணத்தால் நம்மைப்பற்றித் தவறாகநினைத்துக்கொண்டிருக்கிறார்கள் நம்மைப் பற்றிய செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பிலிருக்கும் பத்திரிக்கைகள், வேண்டும் என்றே தவறான கருத்துக்களைப் பரப்பிக் கொண்டுள்ளன.

எந்தெந்த வகையில் நமக்கு எதிரான பிரச்சாரம் செய்ய வேண்டுமோ, அந்த முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதுமில்லை – மறைப்பதுமில்லை. அதே நேரத்தில் தங்களைப்பற்றிய விளக்கங்களையும் விமர்சனங்களையும் செய்யாமலிருப்பதுமில்லை. தென்னாட்டிலே ஒற்றுமை பரவாமல் தடுத்து வகுப்பு வேற்றுமைகள் வளரும் வகையில் ஒரே மூச்சோடு முயன்று வருபவை இந்நாட்டு தேசிய இதழ்கள்தான்,

அந்த இதழ்களை எடுத்துப்பார்த்தால், தாங்கள் ஏதோ தனிப்பிறவிகள் என்று கருதிக்கொண்டு, தனி நாகரீகம் தங்களுக்கு உண்டென் பதை அடிக்கடி வலியுறுத்துவது போலவே நடந்துவருகின்றன.

அண்மையில் ''குடியரசு தின மலர்'' ஒன்றை வெளியிட்ட 'இந்து' இதழ், டில்லி உணவமைச்சர் கே. எம். முன்ஷியாரிடமிருந்து கட்டுரையொன்று பெற்று, பிரசுரித்திருக்கிறது—உணவுப்பிரச்சினை சம்பந்தமானதல்ல அக்கட்டுரை — சம்ஸ்கிருத மொழியின் பெருமைகள் குறித்து! அந்தக் கட்டுரையிலே, முன்ஷியார், சம்ஸ்கிருதத்தின் அருமை பெருமைகள், தொன்மைநிலை சம்பந்தமாக, மிகைபட எழுதியிருக்கிறார் — அதோடு உண்மைக்கு மாறான பல கருத்துக்களையும் தந்திருக்கிறார்.

அந்தக் கட்டுரை சம்பந்தமாக, 'இந்து' இதழின் ஆசிரியருக்கு ஆர். கோபாலகிருஷ்ணன் எனும் தோழர் ஒருவர் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார், 'தொன்மைமிக்க திராவிடமொழி' எனும் தலைப்பில். 'ஆசிரியருக்கு கடிதங்கள்' எனும் பகுதியில், அதை இந்து இதழார் பிரசுரித்திருக்கிறார். நண்பர் கோபாலகிருஷ்ணனின் கடிதம் இது.

ஐயா,

தங்களது குடியரசுதின இதழில், சம்ஸ்கிருதம் ஒவ்வொரு காலத்திலும் இருந்தவிதம்பற்றிய, கே. எம். முன்ஷியார் தீட்டிய கட்டுரையைக் கண்டேன். அறிவாற்றலோடுகூடிய கட்டுரையில் தவறு ஒன்றும் இருக்கிறது. குப்த பரம்பரையின் காலத்தில் கலாச்சாரமும் சிறப்பும்மிகுந்து வடநாட்டில் விளங்கிய சம்ஸ்கிருதம், கன்னடம், மலையாளம் தெலுங்கு ஆகிய மொழிகளுக்கு இலக்கியத்துறையிலும் வளர்ச்சிக்கான வகையிலும் வடிவமைத்துக்கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியைப்பற்றி அவர் குறிப்பிடாமல் விட்டிருப்பதுகாணநான் வியப்படைந்தேன்; ஆனால் அவர் குறிப்பிடும் அந்த நேரத்தில் தெற்கு முழுமையும் சிறந்து விளங்கியது தமிழ்மொழி ஒன்று தான். கன்னடமும், தெலுங்கும், மலையாளமும் பிறந்து ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகவில்லை என்பது தெரிந்த விஷயமாகும். இருந்தும், திருமுன்ஷியார் தவறுதலாக எழுதியிருக்கிறார்; அவர்மட்டுமல்ல, பலர், இதுபோன்ற தவறுதல்களை அடிக்கடி செய்த வண்ணம்தான் இருக்கிறார்கள்; பலசரித்திராசிரி கள், புராதன இந்தியசரித்தி என்றால், இந்து—கங்கை சமவெ யைப்பற்றியதென்றே கருதி கொண்டிருக்கிறார்கள். அதே யில், அவர்கள் அடிக்கடி, மிகமி பழைமையான தென்னிந்தியாவி சரித்திரத்தைப் பற்றி தெரிந் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

உலகிலேயே, மிகப் பழை யான பேச்சு மொழியாக இருந் வருவது (சீன மொழியைபோ தமிழ்மொழிதான். தமிழிலிருந் பிற திராவிட மொழிகள் பிரிந்த வென்று ஒரு சாரார் கூறுவர் மற்றும் சிலர் எல்லா தென்னிந் மொழிகளுக்கும் ஒரு திராவிட தாய் மொழி இருந்ததென்றும் இ லிருந்தே யாவும் பிறந்தன வெ றும் கூறுவர். என்றாலும், குப் காலத்துக்கு முற்பட்ட நூல்க தமிழில் ஏராளமாக இருக்கின்றன அதன் மூலம் நோக்குமிடத்து, த மைத்தவிர வேறெந்தத் திராவி மொழியும், இருந்ததாகத் தெரி வில்லை.

நைல்நதித்தீரத்து நாகரீக வளர் சிக்கும், பாபிலோனியாவின் ப டைய பெருமைக்கும், தமிழ்மொழி உதவியிருக்கிறதென்பதாகவும்கூட சரித்திராசிரியர்கள் நம்புகிறார்கள் இந்த விஷயத்தில் தென்னாட்டுட வாணிபம் நடாத்திய போனீஷிய களுக்கும் சம்பந்தம் இருக்கவேண் டும் என்றும், கருதுகிறார்கள்.

சம்ஸ்கிருதத்துக்கு உள்ள சிறப் பைத் தாழ்த்தும் நோக்குட நான் இதை எழுதவில்லை. இந்தி கலாச்சாரத் துறையில் சம்ஸ்கிரு தத்துக்குள்ள முக்கியத்துவம் மி மிக சிறந்ததுதான். ஆனால், நா இதைத் தெரிவிக்கும் நோக்கம் சில சரித்திராசிரியர்கள் கொண் டுள்ள தவறான அபிப்பிராயங்களை திருத்துவதற்குத்தான். அவர்கள் இந்திய நாகரீகம் பற்றிய வ லாற்றை எழுதும்போது, விந்திய துக்குத் தெற்கேயுள்ள நமது தீ கற்பத்தைப்பற்றி கவனம் செலுத்து வதில்லை என்பதை உணர்த்து நோக்கத்திலேயே நான் இதை எழுதுகிறேன்.''

* * *

நண்பர், சிறு கடிதமூலம், அரி விளக்கத்தையும், எடுத்துக்காட்

யும் தந்திருக்கிறார் 'இந்து'வுக்
அவர் தம் துணை நிற்பவருக்

இந்தியத்துக்கு தெற்கே சரித
ரியர்களின் சிந்தனையும் செல்வ
லை"—இந்த விளக்கம், இந்து
யல் அறியாததல்ல—இங்குள்ள
ழ்மொழியின் சிறப்புபற்றி தெரி
தவருமல்ல அவர்கள். எனினும்,
மழைவிட சமஸ்கிருதமே சிறந்த
மொழியெனும் கருத்துகொண்டு,
ன் புகழ் பரப்பிகளாக இருப்
லேயே சிரத்தை கொள்கின்ற

தாங்கள் ஒரு தனி வகுப்பு, தங்
ளுக்கென ஒரு கலாசார நிலை
ருக்கிறது, தங்களுடைய மொழி
வபாஷை—என்று கூறி தங்களு
ய உலகை தனியானதாகப்பிரித்
க்காட்டும், பேதபுத்தி கொண்
ராக, இந்த நாட்டு ஜாதி வெறித்
லவர்களும், அவர்தம் ஒலிபரப்பி
க இருக்கும் தேசிய இதழ்களும்
ந்து வருகின்றன.

நான் தலைப்பிலே குறிப்பிட்டது
போன்ற முற்போக்கு எண்ணம்
படைத்த வாலிபர்கள் அங்கில்லாம
ல்லை. அவர்கள் உண்மையை
ணரும் சக்தி படைத்தவர்—சரித
ஆராய்ச்சி பற்றி நன்கு அறிவர்—
ம்முடைய நிலையை எத்தகையதாக
க்கிக் கொள்ளும் புத்தித் திறனும்
ண்டு.

அவர்களையும் கெடுத்து தமது
தீய வெறியில் வீழ்த்திக்கொள்ள
இந்த வைதீகங்கள், தம்மாலான
சேவையைச் செய்து வருகின்றன.

சிறு ஆதாரம் யாராவது சொன்
னால் போதும் அதைப் பெரிதாக்கி
தமிழைத் தாழ்த்திக் கூற தயங்குவ
தில்லை — இக்கும்பல். தமிழ்
வரலாற்றை மறைத்துக் கூற கூச்சப்
படுவதில்லை. இந்த வக்கிரபுத்தி
நீடித்தால், வேதனை தானே வள
ரும் — சமரசமா மலரும்? 'நானும்
தம்பியும் விரோதிகள்!' என்று
கூறிக்கொண்டு, மனித உலகைத்
தோற்றுவிக்காமல், வாழ்வை
வீழ்த்திக் கொள்ளத்தான், இந்தக்
கும்பலின் போக்கு உதவும். இதை
உணர வேண்டும்—அதன்படி உண்
மைகளை மறைத்துக் கூறாமல் நடக்க
வேண்டும்.

★

# மீண்டும்?

பாதுகாப்பு சட்டத்துக்கு மீண்டும், உயிரூட்டுவதென, டில்லி தீர்மானித்திருப்பதாக அறிகிறோம்.

காங்கிரசாட்சி ஆரம்பமான காலமுதல், இன்றுவரை, இந்தச் சட்டத்தையே பெரிதும், நம்பி வாழ்ந்தனர், ஆளவந்தார். அதனால், விளைந்த அனர்த்தங்களையும், நாட்டில் நடைபெற்ற கொடுமைகளையும், பலமுறை நாம் விளக்கி வந்துள்ளோம்.

பட்டேல் கொண்டுவந்து, ஆச்சாரியார் வளர்த்து, மீண்டும் இன்று நீடிக்க வைக்கப்படும் நிலைபெற்றிருக்கும் இச்சட்டம், ஜனநாயக முறைக்கு சாவுமணி அடிப்பதாகும்—பாசிசத்துக்கு தீனிபோடுவதாகும்.

எவரையும் கைது செய்து சிறையில் போடலாம், என்கிற அதிகாரத்தை, சர்க்காருக்குத் தருவதே இச் சட்டமாகும்.

முதன் முதலில் பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டபோது, சட்ட சபையில் சரமாரியான கண்டனக் கணைகள் எழும்பின. 'ஏன், இது?' என்றும், இதுபோன்ற சட்டங்கள் கொணர்ந்தால், 'நமக்கும் வெள்ளையனுக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?, என்றும், ஜனநாயகக் குரல்கள் எழும்பின. அவைகளைக் கருத்திலே ஏற்காது, 'நாட்டிலே பலாத்காரம் தாண்டவமாடுவதாகவும் அவைகளை ஒழிக்க இச் சட்டம் அவசியம்' என்றும், பதில் கூறினர்.

ஆனால், என்ன கண்டோம், நாம்! எதிர்க்கட்சிகள்மீது இச்சட்டத்தை வீசி, எவரெவர் தமக்குப் பிடிக்காதவரோ அவரையெல்லாம், சிறைக்குள் தள்ளினர்—சித்ரவதை செய்தனர். மனைவியைத் துறந்து வெளியேறிய வாலிபர்கள், கண்ணீரைச் சிந்தி உயிரைத்துறந்த தாய்மார்கள், அறுந்த தாலிகள்! விழுந்த பிணங்கள்!!—இவ்விதம், இந்தச் சட்டத்தால், நாடு, காடாயிற்று. ரத்தவெறியர்களின் ஆட்சியென்ற பட்டத்தைப் பரிசாகப் பெற்றனர், காங்கிரசார்.

குழந்தைகளோடு கொஞ்சிக் கிடந்த நேரத்தில், இளம் மனைவியரோடு பேசிக்கிடந்த சமயத்தில், எவ்வளவோ அரசியல் வாதிகள், இழுத்துச்சென்று, பூட்டப்பட்டனர்.

"ஏன், இப்படிக் கைது செய்கிறீர்கள்?"

"சர்க்கார் உத்திரவு!"

"என்ன தவறு செய்தார்கள் இவர்கள்?"

"தெரியாது. சர்க்கார் உத்திரவு!"

"சிறைக்குக் கொண்டு சென்றீர்களே — இவர்கள் மீது வழக்கு உண்டா?"

"தெரியாது!"

"வழக்கில்லாமல் சிறையில்போடுவது—நியாயமா?"

"நியாயமோ அநியாயமோ! சர்க்கார் உத்திரவிட்டது. அதன்படி செய்தோம்"

கொந்தளித்த பல குடும்பங்களிலே, ஒழும்பிய கேள்விகளுக்கு, சர்க்காரிலிருப்போர், இத்தகைய பதில்களைத்தான் தந்தார்கள்.

கைது செய்து சென்ற ஒவ்வொரையும் விசாரணையின்றி — மாதக் கணக்கிலல்ல; வருடக் கணக்கில் சிறையிலே போட்டு சீரழித்தார்கள். இந்தச் சட்டத்தின் மூலம், சிறைக்குச்சென்றோரில், நூற்றுக் கணக்கானோர்—இன்னும் வீடுதிரும்பவில்லை, சிறைக்கம்பிகளுக்கப்பால், 'கைதி'களாக அடைபட்டுக்கிடக்கிறார்கள்.

இந்தக் கொடுமையை நாம் கண்டித்தோம் — நாடு 'கூடாது இக்கொடுமை' என்றது—நீதி மன்றங்கள் கூட, 'சர்க்காரின் போக்கு தகாதசெயல்' என்று தீர்ப்பு தந்திருக்கின்றன.

இருந்தும், மீண்டும் ஆறுமாத காலத்துக்கு இந்தச் சட்டத்துக்கு டில்லி, உயிரளிக்கப்போகிறதாம்—அதுவும் 'பழைய' பார்லிமெண்டு

முன்னிலையில், — இப்போது 'பழைய' பார்லிமெண்டின் ஐந்தாவது கூட்டம் டில்லியில் நடந்துகொண்டிருக்கிறது — இச்சட்டம் நிறைவேற்றப்படப்போகிறதாம். 'பழைய' பார்லிமெண்டு, தான் செய்த காரியங்களுக்கெல்லாம், இந்தியாவின் பற்பல பகுதிகளிலே காங்கிரசுக்கு வீழ்ச்சியைத் தேடித் தந்திருக்கிறது. பலர், தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் — புதியவர்கள் அமரும் பார்லிமெண்டு கூட்டமும் விரைவில் கூட்டப்படவேண்டிய நிலையுமிருக்கிறது. இந்த நேரத்தில், இந்த ஆட்பிடிப்பு சட்டத்தை, இவ்வளவு அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் என்னவென்றே தெரியவில்லை.

“பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சி” என்று காங்கிரஸ் ஆட்சியினரால் குற்றஞ் சுமத்தப்பட்ட, பொதுவுடைமைக் கட்சியினரும், தமது நடைமுறைத் திட்டங்களிலே மாற்றங்கள் செய்துகொண்டிருப்பதாகத் தெளிவாக்கியிருக்கிறார்கள்—அவர்களிலே பலரும் காங்கிரசை எதிர்த்து, சட்டசபைக்கும், பார்லிமெண்டுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், அவிசர அவசரமாக, இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின் கோரப்பிடியை இறுக்கும் நடவடிக்கையேனென்றே விளங்கவில்லை.

* * *

காங்கிரஸ் ஆட்சி, கடந்த காலத்தில், தனது அடக்குமுறைகளாலும், ஆளும் திறமையற்ற தன்மையாலும், மிக மிகக் கேவலமாகியிருக்கிறது. டில்லி, பிற்போக்காளர்களின் உறைவிடமாகிவிட்டதோடு, முதலாளித்துவ வல்லரசுகளான அமெரிக்காபோன்ற நாடுகளின் 'செல்லப்பிள்ளை'யாகவும் ஆகிவிட்டது. 'பழைய' பார்லிமெண்டின், கடைசிக் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய, இந்தியக் குடியரசுத்தலைவர் ராசேந்திரபிரசாத், அமெரிக்காவிடம் உதவியாக இந்தியா பெறவிருக்கும் ஐம்பது லட்சம் டாலர் பற்றிக்குறிப்பிடும்பொழுது, 'அமெரிக்காவிடம் செய்யப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தத்தை நான் வரவேற்கிறேன்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இது, இனியும் இவர்கள் அமெரிக்காவின் 'ஆசைநாயகியாக' இருக்கப்போகிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

பணாதிபத்யத்தின் பாதந்தாங்கிகளாகிவிட்ட, டில்லி ஆதிபத்யம், பிற்போக்காளர்களின் கூடாரமாகிவிட்டது. இந்த உண்மையை நாம் நன்றாக அறிவோம். பிற்போக்கு மனம் படைத்த, பழையநிலை மாறக்கூடாதென்கிற எண்ணங்கொண்டோராக ஆகியிருக்கும், டில்லி ஆட்சிபீடம், வளரும் முற்போக்கு சக்திகளை, ஒழித்துவிடக் கருதிவருகிறது—கடந்தகால அதன் அடக்குமுறை தர்பார், காட்சிகள் இதைத்தான் நிரூபிக்கின்றன.

கொள்ளைலாபம் அடித்தனர் — பணமுதலைகள்; கேட்கவில்லை டில்லி! சமுதாயத்துக்கு தேவையான நெசவுப்பொருள்களையும், உணவுப்பொருள்களையும் மறைத்துப்பதுக்கினர் முதலாளிகள்; சிறுநடவடிக்கைகூட எடுக்கவில்லை, டில்லி ஆதிபத்யம். பணத்தைக் கோடி கோடியாகப் பதுக்கிவிட்டு, வருமான வரியும் கட்டாமல் பதுக்கிய பணத்தை வெளியே எடுத்து நாட்டின் நன்மைக்கான ஆலைகளை அமைக்கவில்லை கொடிப்பணம் படைத்த இச்சுயநலக்காரர்களைப்பற்றி எதுவுமே செய்யவில்லை, டில்லிபீடம்!

அவர்கள் சமூகத் துரோகிகள்! தெரிந்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காத, இந்த சர்க்கார்; அதே நேரத்தில் நாட்டில் வளர்ந்து வரும் முற்போக்குக் கட்சிகள்மீது பாய்ந்தது — படைகளைக்கொண்டு தாக்கியது — இரத்தஆறுகளை ஓடவிட்டது! தாலிகளை அறுத்தது! பிணங்களை அடுக்கிற்று!!

எனவே, சமுதாயத்தில் ஆண்டாண்டு காலமாக இருந்து வரும், முதலாளித்துவமுறை வீழ்ச்சியுறக்கூடாது என்பதில் அக்கறைகொண்டது, டில்லி, என்பது தெளிவாகத் தெரிவதோடு, அதே நேரத்தில் முற்போக்குச் சக்திகளைக் கண்டு நடுங்குகிறது — அவைகளை ஒடுக்கிவிட முயல்கிறது—என்பதும் நன்றாகத் தெரிகிறது.

இத்தகைய பிற்போக்கு மனம் படைத்த டில்லி, இந்த நேரத்தில், பாதுகாப்புச் சட்டத்துக்கு உயிரூட்ட வேண்டியதன் நோக்
என்ன என்று எண்ணும்போ
தான் டில்லியின் சதி தென்படுகிற
வளரும் முற்போக்குச் சக்திக
ஒடுக்க, பரவிவரும் உரிமை
கோரிக்கைகளை ஒடுக்க — டில்
தயார் செய்வதே, இந்த பாது
புச் சட்டமாகும்.

இதுபோன்ற அடக்குமுறை ந
வடிக்கைகளைக் காட்டி, இந்தி
முதலாளித்துவத்துக்கும், அதோ
தொடர்பு கொண்ட வெளிநாட்
முதலாளித்துவத்துக்கும், 'செல்
பிள்ளை' யாக நடந்துகொள்ள மு
லுகிறது.

காங்கிரஸ் பீடம் தனது சு
போகத்துக்காக நாட்டிலே கொ
மைகளைப் பரவவிடும் — போக்
ஒழிக்கப்படவேண்டும். இ
போன்ற, அடக்குமுறை நடவ
கைகள், வளரும் உரிமைக் கோரி
கைகளை அடக்கும் செயலேயாகும்
இவைகளை, அனுமதிக்கக்கூடாது-
ஜனநாயகம் மலர—மக்கள் புயலி
அகப்பட்டு மாளாமல் மீள.


# எங்கள் வெளியீடுகள்

எங்களது பதிப்பக வெளியீடுகளனை
தும் பழமையை, பார்ப்பனியத்தை,
முதலாளித்துவ ஏகாதிபத்திய
முறைகளை வெடிவைத்துத்
தகர்க்கும் வெடிமருந்
துக்களாகும்!

**கார்ல்மார்க்ஸ்** 0-12-0

**முதலாளித்துவம் ஒழிக!** 0-12-0

**ஏழையின் அரசியல்** 0-8-0

**பெரியாரும், கவிஞரும், அண்ணுவும்** 0-8-0

**இதயக்குமுறல்** (காதல்கனி அரசியல்நவீனம்) 1-8-0

வியாபாரிகளுக்கு 25o/o கழிவு
தனிப்பிரதி வேண்டுவோர் தபால்
சிலவுடன் பணம் அனுப்ப
வேண்டும்.

இன்பவாழ்வுப்பதிப்பகம்
ரத்தினசபாபதிபுரம் P. O.

# வாழ்க, வெற்றி விளக்குகள்!

★ ★ ★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு, ..தத் தேர்தலில், காங்கிரஸ் ஆதிக்க வெறியை ..பிடித்து வெற்றி பெற்றோரின் பட்டியலைக் கீழே ..துள்ளோம்—உளப் பூரிப்போடு. நமது மாநாட்டுத் ..ர்மானப்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, ..ற்றிமாலை சூடியவர்களின் தொகை:

**சட்ட சபையில் 43**

**பார்லிமெண்டில் 8**

இருள் நீங்கி, புது வாழ்வு மலர, வெற்றி பெற்று ..க்கும் தமிழகத் திருவிளக்குகளுக்கு நமது அன்பு ..ழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!

வாழ்க வெற்றி விளக்குகள்! வளர்க உரிமை ..ழக்கம்!!

## பார்லிமெண்டு

| | | |
|---|---|---|
| ..டலூர் | ... | கோவிந்தசாமி கச்சராயர் |
| ..ருச்சி | ... | டாக்டர் மதுரம் |
| ..ருச்செங்கோடு | ... | எஸ். கே. பேபி (கந்தசாமி) |
| ..ண்டிவனம் | ... | திருக்குறள் முனுசாமி -பி. ஏ., பி. எல். |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. ஜயராம் |
| ..ஞ்சிபுரம் | ... | டாக்டர் கிருஷ்ணசாமி |
| ..ந்தவாசி | ... | என். ஆர். முனுசாமி |
| ..ர்மபுரி | ... | என். சத்யநாதன் |

## சட்டசபை

| | | |
|---|---|---|
| ..ூர் | ... | மாணிக்கசுந்தரம் |
| ..ஜயங்கொண்டம் | ... | கே. ஆர். விசுவநாதன் |
| ,, (ரிசர்வ்டு) | ... | அ. அய்யாறு |
| ..டலூர் | ... | எஸ். எஸ். ராமசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | எ. ரத்தினம் |
| ..ல்குடி | ... | ராஜாசிதம்பரம் |
| ..துறையூர் | ... | பி. ரங்கசாமி பி. ஏ. பி. எல். |
| ..அரங்குறிச்சி | ... | கே. என். ரத்தினம் |
| ..செங்கற்பட்டு | ... | கே. விநாயகம் பி. ஏ. |
| ..காஞ்சிபுரம் | ... | எஸ். தெய்வசிகாமணி -பி. ஏ. பி. எல். |
| ஸ்ரீரங்கம் | ... | டாக்டர் சிற்றம்பலம் |
| வாழப்பாடி | ... | எம். பி. கந்தசாமி |
| பெரம்பலூர் | ... | பரமசிவம் |
| தாராபுரம் | ... | சேனபதி |
| பண்ருட்டி | ... | எஸ். ராதாகிருஷ்ணன் பி. ஏ |
| விருத்தாச்சலம் | ... | என். பரமசிவம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | கட்டிமுத்து |
| திருக்கோயிலூர் | ... | டி. டி. முத்துகுமாரசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. முத்துசாமி |
| விழுப்புரம் | ... | நாகராஜன் |
| விக்கிரவாண்டி | ... | ஏ. கோவிந்தசாமி |
| திண்டிவனம் | ... | வேணுகோபால் |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஜகன்னாதன் |
| செஞ்சி | ... | கே. அரங்கநாதன் |
| மேல்மலையனூர் | ... | கோபாலர் பி. ஏ. பி. எல். |
| பழனி | ... | எம். பி. மங்களக்கவுண்டர் |
| ஒட்டன்சத்திரம் | ... | எஸ். இலட்சுமிபதி |
| அசூர் | ... | ஏ. துரைசாமி |
| ஓமலூர் | ... | பி. ரத்தினசாமி |
| ஆத்தூர் (ரிசர்வ்டு) | ... | எம். பி. சுப்பிரமணியம் |
| கிருஷ்ணகிரி | ... | டி. கிருஷ்ணமூர்த்தி |
| மாயவரம் | ... | கே. ஆர். சம்பந்தம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. வேலு |
| அரக்கோணம் | ... | பி. பக்தவச்சலம் |
| திருப்பத்தூர் | ... | இ. எல். ராகவன் பி. ஏ. பி.எல். |
| ஆரணி | ... | வி. கே. கண்ணன் |
| வந்தவாசி | ... | எஸ். சோமசுந்தரம் |
| ,, (ரிசர்வ்டு) | ... | தசரதன் |
| வாணியம்பாடி | ... | எ. கே. அனுமந்தராயர் |
| செய்யாறு | ... | தருமலிங்கம் |
| போளூர் | ... | எம் எ. மாணிக்கவேல் |
| ஸ்ரீபெரும்புதூர் | ... | டி. சண்முகம் |
| முசிறி | ... | தங்கவேலு பி. ஏ. பி. எல். |

★

திராவிடநாடு

காஞ்சி] 10—2—52 [ஞாயிறு

# விடுதலை செய்க

★

கடந்த 3ந் தேதியன்று நாட்டின் பல பாகங்களிலும் 'அரசியல் கைதிகள் தினம்' வெற்றிகரமாக கொண்டாடப்பட்டிருக்கின்றது. மேற்படி தினத்தில், எல்லா முற்போக்குக் கட்சிகளும், ஒன்று சேர்ந்து ஆதிபத்திய வெறியர்களுக்கு எச்சரிக்கை செல்துள்ளன.

அரசியல் கைதிகள் என்ற பெயரால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், சிறைக்குள் தள்ளப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படாமல் ஆயிரக் கணக்கானோர், இருக்கிறார்கள் — பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் காரணம் கூறி பாது காப்புச் சட்டத்தை வீசி, ஏராளமான கம்யூனிஸ்டுத் தோழர்களை, பிடித்துப் போய் அடைத்தது காங்கிரஸ் ஆட்சி — அவர்களிலே பலரை பிடிக்கும்படி 'வாரண்ட்' பிறப்பித்தது-சிலர் மீது கொடுமையான வழக்குகளைப்போட்டு கூண்டிலேற்றி நிறுத்தியது.

இத்தனைக் கொடுமைகளையும் காங்கிரசார் செய்ததன் காரணம் முற்போக்கு சக்திகளை ஒழிக்க வேண்டுமென்ற வெறியே யாகும்.

இந்த வெறிக்கு, மக்கள் மன்றம் தக்க பதிலைக் காட்டிவிட்டது — இந்தத் தேர்தலில்—காங்கிரஸ் முகத்திலே கரி பூசிவிட்டது. காங்கிரசாட்சியால் துன்புறுத்தப்பட்ட பலரை சட்ட சபைகளின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

தி. மு. கழகம் துவக்கப்பட்ட நாள் முதல் நடைபெற்ற எல்லா மாநாடுகளிலும், நாம் இந்தக் காவல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென சர்க்காருக்கு எச்சரித்து வந்தும், ஆட்சி பீடமேறிய மதோன்மத்தர்கள் கவனிக்கவில்லை. மக்கள் மீது, அடக்குமுறைகளை வீசுவதே தங்களின் பொழுது போக்கெனக் கருதிக் கிடந்தனர்.

காவல் கைதிகளாகச் சிறையிலே அவதிப்படும் கம்யூனிஸ்டுத் தோழர்கள் மீது சட்ட ரீதியான குற்றங்கள் இருந்திருக்குமேயானால், அவைகளை நீதி மன்றங்கள் முன் கொண்டுவந்து, விசாரணைக்கு வைத்து, நீதிக்கும் சட்டத்துக்கும் அருகதையுள்ளோராக இந்த ஆட்சியாளர் நடந்திருக்கவேண்டும். அவ்விதம் செய்யாமல், பலரை இன்னும் சிறைகளிலே, வாடவிட்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடுமை நாகரீக உலகுக்கு ஏற்காத, செயல்—பாசீச வெறிக்கு உதாரணம் கூறும் காட்சி.

காவல்கைதிகளாகயிருப்போரில், பல தலைவர்கள், இன்று சட்டசபையின் பிரதிநிதிகளாகத்தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கூட, இன்றும், இந்த சர்க்கார் விடுதலை செய்ய உத்திரவு பிறப்பிக்கவில்லை. மற்றும் பல தோழர்கள், தலைமறைவாகயிருக்கவேண்டிய நிலையில், திண்டாடி அவதிப்படுகிறார்கள். இன்னும் சில தோழர்கள்மீது, மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

இந்தக் கொடுமைகளை ஜனநாயக உலகம், சிறிதுகூட அனுமதிக்க முடியாது. வெறியின் திருக்கூத்து வளர்ந்து வரும் முற்போக்குச் கள், சரியான பாடத்தைத் த தீரும்.

ஆகவே, கடைசி நேர, எச் கையாக ஆட்சியை நிர்வ போருக்கு நாம் கூறிக்கொ விரும்புகிறோம்.

காவல் கைதிகளை, நிபந் யின்றி; உடனடியாக விடுதலை யுங்கள்.

பல தோழர்கள் மீது பிறப்பித் கும் பிடி வாரண்டுகளை, ரத்து யுங்கள்.

வீண் வழக்குகளை, வாபஸ்பெ கள்.

மரணமேடைகளுக்கருகில் போரைத்திருப்பி அனுப்புங்கள்

இந்த, எச்சரிக்கை—புது உல தின், இதயத்திலிருந்து எழும்பு கும். மக்கள் கோரிக்கைகளை ம மல், ஆடிய திருக்கூத்துக்கா "பலனை"ப்பரிசாகப் பெற்றிருக் ஆட்சிபீடமமர்ந்தோர், உட யாக, இந்தக்கொடுமைகளை நிவ செய்யட்டும்—கடைசி நேரம், இ காங்கிரசாட்சிக்கு, விலகும் போ வது, இந்த விவேகம் பிறக்கட் வேதனை நீங்கட்டும்!! வெறி அ கட்டும்!!!

# உறுப்பினராகுங்கள்

உறுப்பினர் ரசீது புத்தகங்கள் வேண்டி பலர் எழுதியுள்ள தினந்தினம் கேட்டபடியுள்ளனர் அவர்களுக்கு எல்லாம் ரசீது புத் கள் அனுப்ப ஏற்பாடாகியுள்ளது. ரசீது புத்தகங்கள் பெற்ற ஒரு வ திற்குள், உறுப்பினர் சேர்த்து, முழுத் தொகையையும், மீதிக் கட யும் தலைமை நிலயத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

நூறு அங்கத்தினருக்கு குறைவாக உள்ள சிற்றூர்களில், த தாளில், 'அன்புடையீர், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் குறிக்கோளையும், நோக்கங்களையும் ஒப்புக்கொண்டு, மேற்படி கழகத் உறுப்பினராகச் சேர விழைகிறோம். கழகத்தின் சட்ட திட்டங்க அடங்கி நடக்கிறோம் என்று உறுதி கூறுகிறோம்' என்று எ கையொப்பம் வாங்கி, தொகையும் அனுப்பினால் ரசீதுகள் இங்கிரு அனுப்பப்படும்.

தனித்தனியே எட்டணா அனுப்பியும் உறுப்பினராக பதிவு செ கொள்ளலாம்.

இயக்கத்தின் இன்றைய முக்கிய வேலை—முன்னணிப் பணி இ ஆகவே, தோழர்கள் அனைவரும், உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈ வேண்டுகிறோம்.

இது பற்றி மேலும் தகவல்கள் வேண்டினும், வேறு கழக சம் மான செய்திகளுக்கும் பொறுப்பாளர், தலைமை நிலையம், தி. க. காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

# இமயகிரி—இரகசியக்குகை

"கைலாசநாதா—கங்காதரா!"

"இமாசலபதி—ஈஸ்வரா!"

"பனிமலை நாதா—பார்வதிநேசா!"

"இமய கிரிமலைமேல் இருப்பவனே!"

*

"பர்வதராஜகுமாரி—பார்வதி!"

"இமயவரன் தந்த ஈசுவரி!"

"இமயவல்லி! எங்கள் தாயே!"

"சங்கரி! கருணகரி! இமயவதி!"

*

இத்தகைய, ஸ்தோத்திரங்களால் சிவனைப் போற்றித் துதிக்கும் தொண்டர்களைக் கண்டிருக்கிறோம் —பக்திப் போதையில் தம்மையும் மறந்து, குதித்துக் கிடக்கும் அவர்களைப் பார்த்து, கேள்விகள் சில, பரமசிவனைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தால், பரவசத்தோடு பேசுவர்:-

"கைலாயம், எங்கே சாமி இருக்கிறது!"

"எம்பெருமான் — விரிசடைக் கடவுள் இருக்கும் கைலாயம் இருக்குமிடம் வடக்காம் — பர்வத புரியாம!"

"எதுங்க......இமயமலையா?"

"ஆமாம்! இமயகிரிதான் எம்பிரான் பூமி. அங்கிருந்தே இப்பூவுலகை ரட்சிக்கிறார். முப்பது முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுரர்களும் கூடி நிற்க, கின்னர கிம்புருட நாரதாதிகள் ஐயன் பாதகமலங்களைச் சேவிக்க, ஆகா! பார்வதிநாதன் — பரமேஸ்வரன்......"

"அப்படீங்களா! அங்கேதான் இன்னும் இருக்கிறாருங்களா?"

"பதிதனே! பரமன் எங்குமிருக்கிறார்—கைலாயபதியின் கடைக்கண் ஈரேழுலகிலும் இருக்கிறது. கைலாயம் — அவருடைய இருப்பிடம். பூதகணங்கள் சூழ்ந்திருக்க, அங்குதான், அவர் இருக்கிறார்!',

"அப்படீங்களா?"

"ஐயம்கொண்டுள்ளாய் போலும்! தம்பீ—இமயவல்லியார் — இமயாஜன் புத்திரியன்றோ? அவரை எம்பிரான் அங்குதானே மணந்தார்—மறந்தனேயோ பார்வதி பரிணயத்தை!"

"இல்லீங்க—இமாசலத்திலே இன்னும் இருக்கிறாரோ, என்று ஒரு சந்தேகம்"

"சந்தேகம் தவிர்க்கிறேன்! இமாசலத்திலிருந்து ஓடிவருகிறாளே—கங்காதேவி......"

"கங்கைகதிங்களா?"

"ஆம்! ஆம்! கங்காதேவி—அவள் அமர்ந்திருக்கும் இடம், ஈசனின் தலைமுடியிலன்றோ?"

"ஆமாம்—படிச்சிருக்கேன்!"

"நிதர்சனமாகத் தெரியலீயோ, இப்போது. கங்கை, கண்முன்னே ஓடிக்கொண்டிருக்கிறாள். தோன்றும் இடம்,இமாசலம். கங்கையைத் தாங்கியிருப்பவர் — கங்காதரர். அவர் இருக்குமிடம் கைலாயம்!"

* * *

இவ்விதம், பதில்களைத் தருவர்—இமயமலை மீது, சிவபிரான் இருக்கிறார், இவ்வுலகின் கைலாயம் என்றெல்லாம். புராணக் கதைகள், புண்ணியக் காதைகள் என்றெல்லாம், பற்பல எடுத்துக்காட்டி அதட்டுவர், நம்மை நோக்கி. இத்தகைய பூரிப்போடு, புராணதாரிகள் குறிப்பிடும், இமய மலையின் எழிலைப்பற்றி, இவர்களிலே எவருமே அறியார் — பெரிய புராண வரலாறு, இமாசல பருவதத்தில் எம்பிரான் பார்வதியை மணந்த படலம், இப்படி விவரிப்பரே, தவிர, வானளாவ வளர்ந்து கிடக்கும் அந்தப் பனிப் பாறைகளைப் பற்றிக் கேட்டால் விழிப்பர் 'கைலாயம் கண்டோருண்டோ—நரர்களால் நடக்கக்கூடியதோ!' என்று, பெருமூச்செறிவர், இங்குள்ள 'சம்போ—சங்கர—மகா தேவர்கள்!'

ஆனால், வெளிநாட்டு அறிஞர்கள் அந்த இமயமலையின் உச்சியைக் காண, ஈடுபட்டிருக்கும் முயற்சிகள் ஏராளம் — அதன் மூலம் நமக்குச் சொல்லும் ருசிகரச் செய்திகளும், பலப்பல. ஐயன் முடியைக் காணும் ஆவலோ, அம்மையப்பனின் திருக்கோலத்தைக் காணும் ஆசையாலோ அல்ல—இத்தகைய பெரிய மலையின் உச்சி எது, பனியால் உறைந்து கிடக்கும் பாறைகளின் நிலை என்ன, என்று காணும் ஆவலால், உயிரையும் இழக்கத் துணிந்து, பலவித முயற்சிகளிலீடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நல்முயற்சியில், இங்குள்ளோரல்ல, ஈடுபடுபவர்—வெளிநாட்டினர்; அந்நியர். அவர்கள், இந்த உயர்ந்தமலையைப்பற்றிய ஆராய்ச்சியைத் துவக்கியதும், அதனால் அவர்கள்பெற்ற கஷ்டநஷ்டங்களும், ஒரு பெரிய வரலாறாகும்.

உலகின் பெரிய முடியான 'எவரெஸ்டின்' உயரத்தைக் கண்டு அங்குள்ள சூழ்நிலைகளைக் காணவேண்டுமென்கிற ஆசை 1893ல், இந்திய ராணுவத் தளபதியாக இருந்த சி. சி. புரூஸ் என்பவருக்கு உண்டாயிற்று. அவரோடு, பிரான்சிஸ் யங்கஸ்பண்ட் என்பவரும், இந்த நன்முயற்சிக்குத் துணைநின்றார். ஆனால், திபேத் — நேபாளம் ஆகிய நாடுகளுக்குள் ஏற்பட்டிருந்த விரோத நிலை காரணமாக, அவர்கள் முயற்சிகைகூடவில்லை. பிறகு யில் டாக்டர் கெல்லாஸ் எனும் அறிஞர், நோயல் எனும் கப்பற்படை தளபதியும், முயற்சி எடுத்தனர்—அதில், கெல்லாசின் முயற்சிகள் போதிய பலனைத் தரவில்லை. ஆனால், நோயல், இமயமலை பக்கம் செல்லும் கணவாய் ஒன்றைக்கண்டு பிடித்து, அதன் மூலம் எவரெஸ்ட் நோக்கிச் செல்ல முயன்றார்—அந்தக் கணவாய் வழியே திபேத்

**கழகத் தோழர்களுக்கு**

விதிமுறை புத்தகங்கள் வேண்டி எழுதுகின்றனர். சென்னை. போர்வாள் நிலையத்தில் அச்சாகிக் கொண்டிருக்கிறது. தயாரானதும், தோழர்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

தி. மு. க. தலைமை நிலையம்

லாமாக்கள் (மதகுருக்கள்) இமாசலச் சாரலுக்குச் சென்று வணங்கி வந்து கொண்டிருப்பது வழக்கமாம். எப்படி இந்துக்கள், இமயத்தை பரமசிவன் வாசஸ்தலமென்று கூறித்திரிகிறார்களோ, அதுபோல திபேத் மக்கள் இமயமலையை "உலகத்தின் பெண் தெய்வம்" என்று கருதி வந்தனர். அதனால், அவர்கள் அங்கே சென்று, பூஜிப்பது வழக்கமாம்! இந்தப் பாதை வழியே, நோயெல் செல்ல விரும்பியும், அங்கேயிருந்த கவர்னர், அவரைத் தடுத்து, போகாமற் செய்துவிட்டார்.

இந்தச் செய்தியை, 1918ல் பிரிட்டிஷ் பூகோளசொஸைடிக்குத் தெரிவித்தார் நோயல். இதற்குப் பிறகு, இந்த நன்முயற்சியில், உதவவேண்டுமென இந்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டன. அப்போது இந்திய கவர்னர் ஜெனரலாகயிருந்த லார்டு செம்ஸ்போர்டும் இணங்கினார். திபேத் தலைவரான டாலாய்லாமாவும், குறிப்பிட்ட சில ஆங்கிலேயர்போக அனுமதி தந்தார். இதற்கு மேல், எவரெவர்செல்லுவது, அவர்களுக்கான உதவிகள், எப்படி நல்குவது என்று முடிவு செய்வதற்காக கமிட்டியொன்று நியமனம் செய்யப்பட்டு, அதற்கான நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கர்னல் ஹோவார்ப்பரி என்பார் தலைமையில் டாக்டர் கெல்லாஸ், ரேபர்ன், மெல்லோரி, புல்லாக் முதலிய மூவரும் செல்வதென முடிவு செய்யப்பட்டது. இந்திய சர்வே இலாகாவைச் சேர்ந்த, மேஜர் மார்ஷெட், கேப்டன்வீலர், டாக்டர் ஹெரான் ஆகியோரும், மேற்படி குழுவுடன் செல்லுவதென முடிவு செய்யப் பட்டது.

எவரெஸ்ட் சிகரத்தைப் பற்றி ஒழுங்கான வகையில் துவக்கப்பட்ட இந்த ஆராய்ச்சி முயற்சிக் குழு மேமாதம் 18-ந்தேதி அன்று டார்ஜிலிங்கைவிட்டு வியாபாரப் பாதையான லாஸா மூலம், புறப்பட்டது.

அகமலர்ச்சியோடு கிளம்பிய இந்தக் குழுவினர், குளிர்க்காற்றால் மிகமிக வாதைப்பட்டனர். குளிர் தாக்கிற்று! புது முயற்சி நோயைத் தந்தது!—கொடுமைகளால், வரவேற்கப்பட்ட இந்தக் குழுவினர் பட்டபாடு, மிகமிகக் கொடிது. இந்தக் கொடுமை தாங்காமல், ஐந்து நாட்கள் அவதிக்குப்பின், டாக்டர் கெல்லாஸ் உயிர் துறந்தார்!

ரேபர்ன் என்ற இன்னொருவருக்கும், நோய் தாக்கிற்று — அவரும் பின்வாங்கவேண்டியதாயிற்று. ஏனையோர் மட்டும் ஜூன் 20-ந்தேதி அன்று, டிங்கிரி—ஸாங் என்ற இடத்தை அடைந்தனர். இம்மா பெரும்முயற்சியிலீடுபட்ட, மேற்படி குழுவினரான 'அல்பைன் கிளப்' சங்க உறுப்பினர்களில், இருவரான புல்லாக், மல்லோரி இருவர் மட்டுமே, மேலும் கடந்துசெல்ல ஆவல் கொண்டனர் — அவர்கள் கண்ணிலே ராங்பக் பள்ளத்தாக்கு தென்பட்டது. அதன் முடிவில் தான் எவரெட்ஸ்ட் சிகரம் இருக்கிறது. இந்த இடத்தைக் கண்டபிறகு மலையின் பகுதிகளுக்குச் செல்லும் வழிகளைக் காணவேண்டும், அங்கங்கே எவ்வெவ்விதம் மலைத் தொடர்பு அமைந்திருக்கிறதென்பதைக் காணவேண்டும் என்கிற ஆசை, அவர்களுக்கு அதிகரித்தது. இதனால் 16 கூலிகள், ஒரு தலைவன், ஒரு சமைபற்காரன், இரண்டு எடுபிடிகள் ஆகியோரைக் கொண்ட சிறு குழுவுடன், அவர்கள், இம்முயற்சிகளில் ஈடுபடலாயினர்.

ராங்பக் பள்ளத்தாக்கிலிருந்தவாறு, எவரெஸ்ட் சிகரம் பற்றிய பெரு முயற்சிகளில், ஈடுபடலாயினர்.

இந்தப் பள்ளத்தாக்கில் கதிரவனின் வெளிச்சம் எட்டுவது கடினம்! பனிப் படலம் வேறு! குளிர்க்காற்று கொத்தித் தின்ன, இந்தக் குழுவினர் படாதபாடு பட்டனர்.

ஜூலையில் இந்தக் குழுவினர் இன்னொரு சங்கடத்தையும் ஏற்கவேண்டியவர்களாயினர். பருவ காலம் துவங்கிற்று! அதன் அறிகுறியாக மலைத் தொடர்புகளுக்கு மாலை போடுவது போல

# மறைந்தார் மன்னர்

★

தூங்கினார்!
எழும்பவில்லை!!

இத்துயரச் செய்தி கேட்டு உலகமே அதிர்ந்தது, பிப்ரவரி ஆறும் தேதி ஆபிரிகாக்கண்டத்திலே உலவிக்கொண்டிருந்த, அவரது, திருமகள் தேம்பித் தேம்பி, அழுதார்.

பிரிட்டிஷ் மன்னர் ஆறாவது ஜார்ஜ், பதினைந்து ஆண்டு காலம் பிரிட்டிஷ் சிம்மாசனத்தை அலங்கரித்துவிட்டு, கடந்த ஆறும்தேதி காலை $10\frac{3}{4}$ (பிரிட்டன் நேரம்) மணிக்கு, உயிர் துறந்தார்.

உலகில் மணிமுடிகள் ஒழிக்கப்படவேண்டுமென்ற ஆசைகள் பரவி வருகிற நேரத்தில், மன்னர் பரம்பரைபொன்று குறையாத செல்வாக்கோடு, வற்றாத புகழோடு இருக்கிறதென்றால், அது இங்கிலாந்திலேயே யாகும். அத்தகைய அளவுக்கு மக்கள் இதயங்களில், மாறுதலும் கோபமும், எழும்பாத நிலையில், இருந்து பழகி வருகிறது, அந்தப் பரம்பரை.

அதிலே, ஒளிச்சுடர்போல, விளங்கினார், மறைந்த மன்னர்.

பிரிட்டிஷ் சிங்காதனம் அவருக்கு கிடைத்தவிதம், உலகம் அறியும். காதலிக்காக, சாம்ராஜ்யத்தை இழந்தார் இவரது அண்ணன்— 'உலக சாம்ராஜ்யத்தை விட உன் இதய சாம்ராஜ்யமே எனக்கு வேண்டும்' என்று வில்சன் சீமாட்டியைத் தேர்ந்தெடுத்தார், விண்ட்ஸர் கோமகன்.

அன்று, தொடங்கிய ராஜ்யபாரத்தை, திறமையாக நடாத்தி, மக்கள் உளமெலாம் கதறும் நிலையில் பழகி வாழ்ந்துவிட்டு — தூங்கிவிட்டார், ஆறாவது ஜார்ஜ்.

அவரது பிரிவின் விளைவாக பிரிட்டிஷ் சிம்மாசனம் ஒரு பெண்மணியால் அலங்கரிக்கப் பட்டுவிட்டது. அவரது திருக்குமாரி எலிஸபெத், அரியணையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். விக்டோரியா மகாராணிக்குப்பிறகு, பிரிட்டிஷ் மணிமுடி தரிக்கும், பெண் வாரிசு எலிஸபெத்துதான்.

துயரம் தோய்ந்த முகத்துடன் இங்கிலாந்து காட்சி தருகிறது! வீணாடம்பரமின்றி, பழகி, மறைந்த மன்னரை நினைத்து மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர். அவர்கள் துயரத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். வருங்காலம், பிரிட்டிஷ் மக்களின், துயரத்தைப் போக்கட்டும்!

மேகங்கள் வட்டமிடலாயின இதனால் இன்னலுக்கும் தொல்லைக்கும், ஆளாயினர், ஆராய்ச்சி நிபுணர்கள்.

எவரெஸ்ட் சிகரம், புரிய முடியாத புதிராக இருந்தது — ஏனெனில் அதினின்றும் கிளம்பிச் செல்வது போல இருக்கும் மூன்று பெரும் முடிச்சுகள், எங்கே துவங்குகின்றன, அவைகள் மூலம் எவரெஸ்ட் நோக்கிச் செல்ல முடியுமா என்பதே, புரியவில்லை.

ஆகவே, பொழுது விடியு முன்னரே விழிப்பதும், வேலையாட்களை 'அங்கே போ—இந்தப் பக்கம் ஓடு' என்று கட்டளையிடுவதுமாக, தமது வேலையை மேற்கொண்டனர்.

கீழ்த் திசை நோக்கி இவர்கள் பயணம் துவங்கியபோது, வடக்கில் கண்ட கொடுமைக்கு மாறாக, பசுஞ் சோலை யொன்று தென்பட்டது. பார்லி, விளைந்தது—பயிர் நிலம் இருந்தது. ஆர்ம் நதிக்கரையிலேயிருந்த கர்டா எனும் இடத்தைக் கண்டனர். ஆர்ம் நதி, இமயமலையைக் கடந்து, நேபாளம் வழியாக, இந்திய பூமிக்கு வருவதாகும். அங்கிருந்து புறப்பட்ட இக்குழுவினர், காமா பள்ளத் தாக்கைக் கண்டனர்.

புகை போலத் தென்படும் பூமி! கண்ணுக்கெட்டாத மலையுச்சி! பனிப் பாறைகள்! அங்கே தவழ்ந்து வழியும் நீரருவிகள்! இதுபோல் பற்பல இடங்களைத் தாண்டிய வண்ணம், இக்குழுவினர் சென்றனர். செங்குத்தான பாறைகளில் தாவியேறினர்! தயங்காமல் சென்றனர்! ஒரே தடவை யென்றல்ல — விட்டு விட்டு—புது இடங்களைக் கண்டு திரும்பி, பிறகு புறப்பட்டு — இவ்விதம் அவர்கள் பெரு முயற்சி செய்தனர்.

ஒரு தடவை, பிராண வாயு கூட கொண்டு செல்லாமல், ஜெனரல் புரூஸ், 26800 அடி வரை சென்றார். மற்றோர் சமயம், இரண்டு கூலிகள், கைவசம் பிராண வாயுவுடன் 27200 அடி வரை கடந்தனர்.

1924ல், மீண்டும், பலத்த முஸ்தீபோடு, ஜெனரல் புரூஸ்—1922ல் தாம் கண்டு வந்த பாதைகள் மூலம் புறப்பட்டார். அவருடன் நார்ட்டன், என்பவரும் சாமர்வெல் என்பவரும் சென்றனர்.

இவர்கள், 28000 அடிவரையில், எட்டிப்பார்த்தனர். இதற்குச்சின்னாட்களுக்குப் பிறகு மல்லோரியும் இர்வினும், கையில் பிராணவாயு எடுத்துக் கொண்டு எவரெஸ்ட் உச்சியைக் கண்டுவிடுவோம் எனும் வீராவேசத்துடன் சென்றனர் — 28200 அடிக்குமேல் சென்றனர்! சென்றவர்கள் — திரும்பவில்லை! என்ன ஆனார்கள், எப்படிப்போனார்கள் என்பதே தெரியவில்லை!

* * *

இந்த முயற்சிகளுக்குப் பிறகு, இதுவரை பலமுயற்சிகள், நடைபெற்றிருக்கின்றன—இந்த முயற்சிகளின் பலனாக வாழ்வைத் துறந்த அறிஞர்கள் பலர். காண முடியாததைக் காணவேண்டுமெனும் பேரா வலோடு—அவர்கள் தாங்கிய சங்கடங்கள், அடைந்த துயரங்கள் மிகப் பலவாகும்! பனிப்பாறைகள் மீது, இருண்ட இரவுகளில், அவர்கள் பட்ட அவதிகளும் துயரங்களும் சொல்ல முடியாதவையாம்!

அவர்கள், காணமுடியாததைக் காணும், ஆசையோடு, வாழ்வை இழந்தனர்.

அம்மையப்பன் அருளைப் பெறுவோம், கைலாய பதியைக் காண்போம், சொர்க்கம் புகுவோம் என்பதற்காக அல்ல—அவர்கள் சென்றதும். செத்ததும்.

இயற்கையின் ரகசியங்களைக் காணும் ஆவல், அந்த நல்லறிவாளர்களை, இவ்வளவு சங்கடங்களையும் தாங்கச் செய்தது.

ஆனால், இங்கிருப்பவரோ 'ஈசனே! சிவகாமி நேசனே' என்று திருவாசகம் படித்து, பெரியபுராணத்தில் திளைத்து, 'இமாசலராஜன் பெற்றெடுத்த தேவியை எல்லாம் வல்ல ஈசன் மணம்புரிந்தார்' என்று பாடித்திரிகின்றனர்.

புராணப் பெருமைகள் கூறி விளக்கங்கள் விடுப்பதிலேயே நேரத்தையும் நினைப்பையும், செலவழித்துக் கிடக்கிறார்கள். ஆனால், 'அம்மை அப்பனை' அறியாத மேல் நாட்டினரோ, கஷ்ட நஷ்டங்களைப் புன்சிரிப்போடு தாங்கி, புதுப் புதுச் செய்திகளைத் தந்த வண்ணமுள்ளனர்-இமய பர்வதம் குறித்து.

முன்பு நாம் தந்துள்ள, முயற்சிகளுக்குப் பிறகு, பல தடவைகள், எவரெஸ்ட் பயணம், நடத்தப்பட்டிருக்கிறது, வெளிநாட்டு விற்பன்னர்களால். ஒவ்வொரு முறையும், அவர்கள், விசித்திரமான தகவல்களைத் தந்து போயிருக்கின்றனர்.

அண்மையில், சிலர் இமயச்சாரல் பற்றித் தந்த தகவல், உலக விஞ்ஞானிகளையே பெரும் புதிருக்கு ஆளாக்கியிருக்கிறது.

பனிமலையில் உயிர்கள் வாழ்கின்றனவாம். குரங்கு போன்ற உருவத்தோடு அவைகள் பனிமலைகளில் திரிந்து கொண்டிருப்பதாகவும், அவைகளைப் பார்க்கும்போது பலமிக்க மிருகங்களாக யிருக்கின்றனவென்றும் குறிப்பிட்டுள்ளனர்!

இதைக் கேட்டதும் இங்குள்ள 'தம்பிரான்கள்' கெக்கலிப்போடு

---

## 'அகிம்சா' வெறி!

24—1—52 வியாழன் இரவு 10¼-மணிக்கு நமது கிளைக்கழகத் தோழரும், தி. மு. க. ஆதரவு பெற்ற, 'உழைப்பாளிகள் கட்சிக்குத் தேர்தல் வேலை செய்தவருமான நெல்லிக்குப்பம் தோழர் மஜீத், குத்திக் கொலை செய்யப்பட்டார். கொலைநிகழ்ச்சியைத்தடுத்த தோழர்கள் வேணு, பக்கிரி என்ற இருவரும் படுகாயப் படுத்தப்பட்டனர். இது சம்பந்தமாக ர கண்ணன் என்னும் காங்கிரஸ் பிரமுகர் கைது செய்யப்பட்டுள்ளார். ராமலிங்கம் என்பவரையும் போலீஸ் கைது செய்து, ஜாமீனில் விடுத்துள்ளனர். கொலைக்குக் காரணமென்று கூறப்படும் கண்ணன் எனும் காங்கிரஸ் காரர், 'தியாகி மான்யம்' பெற்றவர். தேர்தலின்போது கோயங்காவுக்காக வேலை செய்தவர்.

1—2—52 அன்று பண்ருட்டி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கைதி விசாரிக்கப்பட்டார். கொலை செய்தது தான் தான் என்று கைதி ஒப்புக் கொண்டார்.

காஞ்கிரஸ் வெறிக்குக் காரணமான தோழர் மஜீதுவுக்கு நெல்லிக்குப்பம் கிளைக்கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, மஜீது குடும்பத்தாருடைய தாங்கொணா துயரத்தில் தானும் பங்கு கொள்கிறது—என்று நெல்லிக்குப்பம் தி. மு. க. செயலாளர்கள் அ. வெங்கடபதி, ச. இராசகோபாலன் தெரிவிக்கின்றனர்.

கூறத் துவங்கலாம்—"கேட்டீர்களா சேதியை! இமயத்தில் எம்பெருமான் வசிக்கிறார் என்று கூறினால் கேலி செய்தீர்களே—இப்போது அங்கு மிருக சஞ்சாரம் இருப்பதாக, அயலவர் கூறுகிறார்கள். அவர்கள், அயல் மதஸ்தர்கள்—ஆகவே, அங்கே இருப்பவைகளைப் பார்த்து, மிருக வகைகள் என்கின்றனர்—அவைகள் மிருகங்கள் அல்ல; எமது பிரானின் பூதகணங்களாம்!" என்று. ஆனால், இவர்தம் கூற்றை, இப்போது எவரும் நம்பமாட்டார் எனினும், அந்த மிருக வகைகள் யாவை, எப்படி பனிமலையில் வாழ்கின்றன, என்கிற ஆராய்ச்சி, பலரது கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

பனி—மனிதர்களைப் பற்றிய, பேச்சு, உலகத்தில் பல்வேறு இடங்களிலே, இப்போது ஒன்றல்ல, நெடுநாட்களாகவே கிளம்பியிருக்கிறது.

இந்த எண்ணத்தை வைத்து, அமெரிக்கர்கள், திரைப்படம் ஒன்றைக் கூடத்தயாரித்திருக்கின்றனர்-"சென்னை"யில் கூட காட்டப்பட்டது. கற்பனை வலிமையுள்ள ஒரு ஆசிரியர் தீட்டிய கதை அது. விஞ்ஞானிகள் கிளப்பிய சில புதிர்களை வைத்துக் கொண்டு, அக்கதை, திரைப்படமாக்கப் பட்டிருக்கிறது.

சில விஞ்ஞானிகள் ஓரிடத்தில் சென்று எண்ணெய்காணும் பூமிக்காகத் திரிகிறார்கள்.— அப்போது ஓரிடத்தில் ஏதோ ஒன்று புதைந்து கிடக்கிறது. அதைக் கண்டதும், அவர்கள் மனதில், "பறக்கும்தட்டு" பற்றிய நினைவு வருகிறது. இந்தத் தட்டுகள் ஆகாயத்தில் சுழல்வதாகப் பத்திரிகைகளில நாம் கூட படித்தோமல்லவா! இந்தத் தட்டு கீழே விழுந்திருப்பதாக நினைத்து, அந்த இடத்தை வெட்டி, அதிலிருந்து ஒரு பகுதியை விமானத்தில் கொண்டு செல்கிறார்கள் — அந்தத் தட்டு பதிந்திருந்தஇடம் பனிப் பிரதேசம் ஆகவே, தாங்கள் கொண்டு சென்ற அந்த பனிப்பாறையை, பத்திரமாக மூடி வைக்கிறார்கள். ஆனால் சின்னாட்களுக்கெல்லாம், பனிப்பாறை கரைய ஆரம்பிக்கிறது அது கரையக் கரைய ஏதோ ஒரு அலறல் கேட்கிறது! எல்லோரும் திடுக்கிடுகிறார்கள்—ஒரு நாள் அந்தப் பனிப்பாறை முழுதும் கரைந்து போய்க் கிடக்கிறது—அதனுள்ளே கிடந்த ஒரு பயங்கர உருவம், அவர்களை எதிர்நோக்கித் தாக்கத் துவங்குகிறது! இவர்கள்—துப்பாக்கியாலும், கோடாரியாலும் தாக்குகிறார்கள்—ஆனால் அது சாகவில்லை—அவ்வளவு வலிவுள்ளதாகத் திரிகிறது......

இப்படி, எடுத்திருந்தனர், அந்தத் திரைப்படத்தை. அந்த அளவுக்கு 'பனிமனிதர்'கள் வாழ்வதாக, மேல் நாட்டு விஞ்ஞானிகள், கருதுகிறார்கள்.

இதற்கு வலூவூட்டுவது போல, இமயத்தில் ஒரு பனிப்பாறையில், ஒரு காலடியைக் கண்டதாகவும், அதைப் புகைப்படம் பிடித்து வந்திருப்பதாகவும், இமயம் சென்ற ஒரு அறிஞர், அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இந்த உண்மைகளைவைத்து ஆராயும் போது, பனியையும் தாங்கிக் கொண்டு திரியும் அளவில் உடலமைப்பு பெற்ற, மிருகவகைகள், இமயச்சாரலில் உலவுவதாக நம்புகிறார்கள். அதோடு, அவைகள் தங்களுக்கான உணவு வகைகளையும் அங்கே தேடிக்கொள்வதாகவும், அவைகள் கூட்டங் கூட்டமாக இருப்பதாகவும், கருதுகிறார்கள்.

அறிவு, இவ்வளவு தூரம் போய்க் கொண்டிருக்கிறது—பனியில் எப்படி மிருங்கள் வாழ்கின்றன, பனிமலையில் உலவிவிட்டு இந்த மிருகங்கள் ஆங்காங்கே உள்ள பள்ளத் தாக்குகளில் இருக்கும் காடுகளில் பதுங்கிக்கிடக்கின்றனவா, என்ற, ஆராய்ச்சியில் இருக்கின்றனர்.

இந்த ஆராய்ச்சிக்கு ஏதுவாக, மற்றொரு உண்மையை, இமயம் சென்றோரில் ஒருவர், அண்மையில் தந்துள்ளார். அதாவது, பற்பல இடங்களில், பழமுதிர்க்காடுகள் காணப்படுகின்றனவாம் — அங்கே பூந்தோட்டங்கள் பலவும் தென்படுகின்றனவாம்—அவைகளிலே வண்ணாத்திப் பூச்சிகள் வட்டமிட்டுத் திரிகின்றனவாம்! பார்க்க குதூகலமாகயிருக்கிறதாம்!!

அறிவும் ஆராய்ச்சியும், இமயமலை குறித்து, நாம் கேட்டிராத உண்மைகளைத் தருகின்றன. அவைகளைக் கற்பனையோடு கலந்து, திரைப்படமாக ஆக்குமளவுக்கு, மேற்கத்திய நாடுகள், சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், நம்மவரோ, இது எதைப்பற்றியும் கவலைப்படாது, புராணப் பெருமைகள் கூறுவதும், புளுகுமட்டுகளை 'காலேட்சபம்' பண்ணுவதிலும் இருக்கின்றனர். என்று நாமும் அவர்களைப் போல ஆவோமோ! இயற்கையின் ரகசியங்களைத் துருவி அறிவோமோ!!

## "அறிவின் தூதர்கள்"

பழைமை இருள் நீங்கி, புது உதயம் காணப்போராடி வாழ்வைத் துறந்த மாவீரர்கள் ஒவ்வொருநாட்டிலும், இருந்திருக்கிறார்கள். வைதீக வெறியும், பழைமைப் பாசமும் அவர்களைச்சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது; சித்ரவதை செய்திருக்கிறது. 'புதுமை காணவிரும்புகிறார்கள்!' — இந்தக் குற்றச்சாட்டை வீசி கொடுமைப் படுகுழியில்வீழ்த்திற்று, பழைமைப் பாசம்.

அத்தகைய அறிவின் தூதர்களில் அறுவரைப்பற்றிய விபரங்களை நண்பர் கே. ஏ. மதியழகன் பி. ஏ, அவர்கள் "அறிவின் தூதர்கள்" என்ற நூல்மூலம் அருமையாக விளக்கியிருக்கிறார்.

தெளிவும் சிந்தனையோட்டமும் நிரம்பிய அவரது எழுத்துக்களில், புதுமைத்தாகம், அலைமோதுகிறது. விஷக்கிண்ணத்தைக் கையிலேந்திய சாக்ரடீஸ்—கிரேக்க நாட்டுத்தீரன், சுகபோகத்தைத் துறந்த புத்தர்—இந்தியா தந்த மாணிக்கம், உயிரோடு கொளுத்தப்பட்ட உத்தமன் மார்டின் லூதர் — ஜெர்மனி தந்த திருவிளக்கு, பழமைக்கு சாவு மணி யடித்த புரூனோ — இத்தாலியின் விடுதலைச் செல்வன், மூடநம்பிக்கைத் திரையைக் கிழித்த சேர்விடஸ் — ஸ்விட்சர்லாந்து அளித்த சிந்தனைச் சிங்கம், எழுத்துக்கள் மூலம் புதுமைக்கு உயிரூட்டிய பேர்னாட்ஷா—இங்கிலாந்தின் காவியமன்னன், ஆகியோரைப்பற்றி ரத்தனச்சுருக்கமாக, "அறிவின் தூதர்கள்," படம் பிடித்துக்காட்டுகிறது. புதுமைகாணத் துடிக்கும் வாலிப உலகும், மாணவர் சமுதாயமும் இதயத்தில் குடியேற்றவேண்டிய இந்நூல் கிடைக்கும் முகவரி:—திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி. விலை அணா 12.

# மல்யுத்தவீரர் இன்று பிரதமர்

[இலங்கைத் தீவு இந்த வாரம் தனது நான்காவது சுதந்திர தின விழாவைக் கொண்டாடியிருக்கிறது—பூரிப்போடு. சின்னஞ் சிறு தீவானாலும் அதற்கான தனி மதிப்பை, உலக அரங்கில், பெற்றுத் தந்த பெருமை இலங்கைப் பிரதமர் சேனநாயகாவுக்கு உண்டு. அவரது வாழ்க்கையைப் பற்றி டி.வி. சுப்பிரமணியம் மலேயா 'தமிழ் முரசு' மூலம் தருவதே இக் கட்டுரை.]

காமன்வெல்த் குழுவைச்சேர்ந்த ஆசியப் பிரதமர் டி. என். சேனநாயகாவே லண்டன் வட்டாரத்தில் அதிகமாக விரும்பப்படுபவர்; புரிந்து கொள்ளப் படுபவரும் அவரே. அவருடைய கபடமற்ற தன்மையும் சரசமானபேச்சும் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளைத் தங்களில் ஒருவராகவே கருதச் செய்வது தான் அதற்குக் காரணம்.

பணக்கார விவசாயியாக பிறந்த சேனநாயகாவும் தனது இளம் வயதில் கைதேர்ந்த விவசாயியாகத் தான் இருந்தார். ஆனால் சாதகமான பல சூழ்நிலைகள் அவரை வேறு துறையில் மளமளவென்று உயர்த்தி விட்டன. ஆசிய அரசியலின் அலாவுதீன் என்று கூட அவரை ஒரு வகையில் குறிப்பிடலாம். பயிர்த்தொழிலில் காட்டிய ஆர்வம் போலவே அவருடைய நாட்டைத்தைக் கவர்ந்த மற்றொரு பிரச்சினை மதுவிலக்கு ஆகும். அந்த நாளில் ஒரு வட்டாரத்தில் வாழும் மக்களில் பாதிக்குமேல் கள்ளுக்கடைகள் கூடாதென்று வோட்டளிப்பு மூலம் அபிப்பிராயம் தெரிவித்தால் மதுக்கடைகள் மூடப்பட்டுவிடும். சேனநாயகா தனது வட்டாரத்தில் இருந்த அத்தனை கள்ளுக்கடைகளையும் மூடி வெற்றி கண்டார். சிங்களவரின் மதிப்புமிக்க தலைவராய் திகழ்ந்த அவருடைய அண்ணன் எப். ஆர். சேனநாயகா மாதனா கலகம் சம்பந்தமாக சிறைபுகுந்த காரணத்தால் டி. எஸ். சேனநாயகாவும் அரசியலில் குதிக்க நேரிட்டது. இந்தக் கலகம் கம்போலா என்ற இடத்தில் தொடங்கியது. அந்த வட்டாரத்தில் இருந்த பௌத்த மதத்தினராகிய சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இக்கலகத்தில் சர்க்கார் தலையிட்டு முஸ்லிம்களுக்கு சலுகை காட்டியது. இதனால் ஆத்திரமடைந்த பௌத்தர்கள் போலீஸ் கட்டுப்பாடுகளை மீறலாயினர். இந்தக் கலகத்தில் டி. எஸ். சேனநாயகா பங்கு கொண்டாரா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் அவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பொழுது மன்னிப்பு கோர மறுத்தார். இந்தச் சம்பவத்தின் உண்மை விவரங்கள் எப்படியிருந்த போதிலும், இலங்கைப் பிரதமர் இத்தகைய சம்பவங்களை எளிதில் மறந்து விடுபவர் என்பது மட்டும் தெளிவாகிறது.

இந்தியாவும் அயர்லாந்தும் பிரிட்டிஷார் அடக்குமுறைக்கு ஆளானதுபோல இலங்கை ஆட்பட்டதில்லை. ஆகவே பிரிட்டிஷார்மீது வெறுப்பு கொள்ள சிங்கள அரசியல்வாதிக்கு இடமில்லாமற் போயிற்று. ஆனாலும் சேனநாயகா அன்று பிரிட்டிஷாருடன் நடத்திய போராட்டம்போல பிறகு நடத்த வாய்ப்பே ஏற்படவில்லை. பிரிட்டிஷார் கோரிக்கைகளை எதிர்த்துத் தனது கொள்கைகளை சேனநாயகா எடுத்துக் கூறியதுண்டு. யுத்த காலத்தில் (1942—45) தோட்ட முதலாளிகளுக்கு மாஜிஸ்திரேட் அதிகாரங்கள் கொடுக்கும் மசோதா ஒன்றை பிரிட்டிஷார் கொண்டுவந்தனர். நாசகார வேலையில் ஈடுபடுவதாகச் சந்தேகங் கொண்டால் யார் மீதும் நடவடிக்கை எடுக்கவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. அவருடைய நண்பர்களில் பலர் அந்த மசோதாவைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஆதரித்தனர். ஆனால் டி. எஸ். சேனநாயகா மசோதாவை வன்மையாக எதிர்த்துப்போராடினார். இலங்கை சுதந்தரம் பெறும் தறுவாயில் எழுந்த பல பிரச்சினைகளுக்கும் பிரிட்டிஷார் சொன்னபடியெல்லாம் சேனநாயகா தலையாட்டிவிடவில்லை.

இத்தனை போராட்டங்கள் நடத்தியும் சேனநாயகாவிடம் வெறுப்புணர்ச்சிதங்குவதில்லை. இவருடைய இத்தகைய போக்குக்கு காந்திஜியைப்போலவோ நேருஜியைப் போலவோ உயர்ந்த தத்துவங்கள் கொண்டிருப்பதால் அல்ல. யாரையுமே நிரந்தரமான பகைவனாகக் கருதக்கூடாதென்று பகுத்தறிவு காட்டும் வழியில் சேனநாயகா செல்கிறார். ஏமாற்றங்கள் எதுவுமில்லாமல் விரைவில் அரசியல் தலைமை எய்திவிட்டதும் மற்றொரு காரணமாக இருக்கலாம். ஏற்கனவேகுறிப்பிடப்பட்டதுபோல, அவர் ஆசிய அரசியலில் அலாவுதீன் தலைமை ஸ்தானம் அவரைத்தேடிக்கொண்டு ஓடிவந்தது. அவருடைய புகழ் பெற்ற அண்ணன் இறந்ததும் சேனநாயகா அந்த இடத்தில் அமர்த்தப்பட்டார். எத்தனையோ பலமும் தகுதியும் வாய்ந்தவர்கள் போட்டியிட்டும் சேனநாயகா தலைமைநிலை அடைய இலங்கை சட்டசபையின் விசித்திரமான தேர்தல் விதியும் பெரிதும் உதவியது. சட்டசபை ஏழு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு மந்திரியைத் தேர்ந்தெடுத்தது. ஒவ்வொரு மந்திரியும் மற்ற மந்திரிகளுடன் கட்டுப்படாமல் தனித் தனியாக நின்றதால் சேனநாயகா மற்ற அரசியல் ஜாம்பவான்களுடன் சமமான நிலையில் நிற்க முடியாதது. முதன்மை பெற்று விளங்கிய ஜெயதிலாகா அரசியல் உலகைவிட்டு விலகி கடைசியில் இறந்ததும்விடவே டி. எஸ். சேனநாயகா வெடி சுலபமாக இலங்கை அரசியலில் உயர்ந்த அந்தஸ்து பெற்றார்.

இந்தச் சமுகமான சூழ்நிலையினால் சேனநாயகாவிடம் வெறுப்புணர்ச்சியும் அதனால் ஏற்படும் இடர்பாடுகளும் இடம் பெருமல் போயின. அரசியல் தலைவர்கள் பலர் ஆத்திரச் சொற்களையும் வெறுப்புணர்ச்சிகளையும் கொட்டி அரசியல் உலையில் அகப்பட்டுவிழிக்,

கும் நேரத்தில் சேனநாயகா தங்கு தடையின்றி அரசியல் பாதையில் சவாரி செய்கிறார். சேனநாயகா சிறுபான்மையினரிடம் முழுக்க முழுக்க நேர்மையாக நடந்துகொள்கிறார் என்பதல்ல அவர் சில சமயங்களில் சிறுபான்மை மதத்தினரிடம் அனுசரணை காட்டுகிறார். ஆனால் தமிழர் போன்ற சிறுபான்மை இனத்தவரிடம் குறிப்பாக அவர் இந்தியத் தமிழரிடம் ஒரே மாதிரி நடந்துகொள்வதில்லை. இலங்கை இந்தியர் பிரச்சினைபற்றி அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக்கொண்டிருப்பது சேனநாயகாவின் பண்பாட்டில் மற்றொரு சாயல். எப்பொழுது எவ்வளவு கௌரவமாக விட்டுக் கொடுக்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.

அவர் உண்மையிலேயே சிறந்த ஜனநாயக வாதியா என்று கூறுவது கடினம். ஏனெனில், அவர் எதிர்க்கட்சிக்கும் இடம் கொடுக்கவேண்டிய கட்டாயத்திலிருந்தார். பிரதிநிதித்துவ சபையில் சேனநாயகாவின்கட்சிக்குப்போதியமெஜாரிட்டி இல்லை. அதனால் சுயேச்சை அங்கத்தினர்களையும் இழுத்துப்போட்டு கூட்டு மந்திரி சபை அமைக்க வேண்டியதாயிற்று. இப்பொழுது கூட சபையில் அவருடைய கட்சியினர் மூன்றில் இரண்டு பங்கினர் தான் இருக்கின்றனர். அதனால் எதிர்க் கட்சியை மதிக்காமல் நினைத்தபடி செல்ல முடியாது. அதனால் சேனநாயகா எல்லோரையும் "தாஜா" செய்து ஜனநாயக தத்துவங்களை பேசும் கட்டாயத்தில் இருக்கிறார்.

ஆனால் ஜனநாயகபிரதமர் என்று கூறுவதற்குரிய இரண்டு இலட்சணங்கள் அவரிடம் இருக்கின்றன. அவருக்குள்ள திறமையும், ஆலோசனைகளை ஏற்கும் பண்பும் அந்த இரண்டு தகுதிகளாகும். சமீபகால அரசியல்வாதிகள் எவரையும் விட நல்லநோக்கமுள்ள ஆலோசனைகளை ஏற்கத் தயங்காதவர் சேனநாயகா என்று கூறலாம், அவர் பல சமயங்களிலும் மிக அறிவுக் கூர்மையுடன் ஆலோசனையாளர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அதே சமயத்தில் அவர் பலசமயங்களில் ஆலோசனைகளை மறுத்து தன் கருத்துப்படி நடந்தும் வெற்றி கண்டிருக்கிறார்.

சேனநாயகாவே பல முறை ஒப்புக்கொண்டிருப்பதுபோல அவருக்குப் பள்ளிப் படிப்பு அதிகமில்லை மிகவும் படித்த ஐவர்ஜென்னிங்ஸ் போன்ற சர்வகலாசாலை துணைவேந்தர்கள் கூட சேனநாயகாவின் திறமைமிக்க ஆலோசனைகளுக்கு செவிமடுத்து ஆனால் அவர் நோக்கப்படி ;அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் பான்மையையும் பாராட்டியிருக்கிறார்கள்.

சேனநாயகா சுலபத்தில் பரபரப்பு அடைந்து விடுவதில்லை. ஒரு ஆண்டுக்கு முன்பு ஒரு நாள் வீடியற்காலை ஒரு கிறுக்கன் அவருடைய படுக்கையறையில் நுழைந்து தன்னை ஸ்ரீ லங்காவின் ராஜனாகும்படி ஆண்டவன் அருள் புரிந்திருக்கிறார் என்றும் தான் மன்னராக உதவி செய்தால் சேனநாய்காவை ஆயுள் பரியந்தம் பிரதமராக்குவதாகவும் சொன்னான். ஆயுள் முழுதும் பிரதமர் பொறுப்பேற்க நான் அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லி கிறுக்கனை வெளியில் அனுப்பினார். நான் இலங்கை அயல்நாட்டுக் கொள்கை பற்றி பலப்பல கேள்விகள் கேட்டிருக்கிறேன், நேருவைப் போன்ற உணர்ச்சி மிகுந்த லட்சியவாதிகளாக இருந்திருந்தால் ஆத்திரமடைந்திருப்பர். ஆனால் சேனநாயகா அவ்வளவுக்கும் பதறாமல் பதிலளித்தார்.

அவர் மிகுந்த தந்திரசாலி என்பதை எதிரிகளும் ஒப்புக்கொள்வர். ஆனால் அவருடைய அரசியல் அடிவானம் பரந்ததல்ல. அவர்இலங்கையில் விவசாயத்தைப் பெருக்கியிருக்கிறார். வளர்ந்து கொண்டிருக்கும் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிப்பவரும் அவர்தான். ஆனால் அவர் இந்தியாவைக் கண்டு அஞ்சுவதால் பிரிட்டிஷ் அரசியல் தந்திரச் சக்கிரங்களில் இலங்கை அயல் நாட்டுக் கொள்கைகளை இணைத்துவிட்டார். விவசாய அபிவிருத்தி மூலமும் அமெரிக்க உதவிமூலமும் கம்யூனிசத்தை எதிர்ப்பது அரசியலில் நடுவழியைக் கடை பிடிப்பது என்றெல்லாம் அவ பழைய பாணியிலேயே பேசிவரு கிறார்.

சொந்த வாழ்வில் சேனநாயக ஒரு வேதாந்தி. அவர் ஒரு கால தில் குஸ்திச்சண்டை வீராக திகழ்ந்தார். இப்பொழுதுகூட அவ ருக்கு யானைகளைப் பழக்க நன்று தெரியும். இப்பொழுது அவருக்கு 66 வயது ஆகியும்கூட சமய நேரும் பொழுதெல்லாம் குதிரை சவாரி செய்யத் தவறுவதில்லை சுவையான உணவு சாப்பிடுவதி அவருக்கு விருப்பம் அதிகம் அவருடைய பேச்சு கவர்ச்சி யாகவோ அல்லது அறிவு நயம் கொழிப்பதாகவோ இருக்கிறது ஆனால் நகைச்சுவை கொப்பளி பாகவும் இருக்கும். அதுவின் அளப்பாகவும் இருக்காது, தன கட்சிக்காரர்களுக்கும் நண்ப களுக்கும் அவர் சலுகை காட்டா மலில்லை. ஆனால் அதிகமாக லஞ் ஊழல் தாண்டவமாடாமல் பார் த்துக் கொள்கிறார். இலங்கையை சேனநாயகா பெரும் பாய்ச்சலி முன்னேற்றத்துக்கு அழைத்து சென்றுவிட மாட்டார் என போதிலும் பின்னேற்றம் இரு க்காது என நம்பலாம்.

## வருந்துகிறோம்

தஞ்சை மாவட்ட விவசா களின் வீரர் மணலி. சி. கந்தசா எம். எல். ஏ., அவர்களது தந் யார் அண்மையில் காலமா என்ற செய்தி கேட்டு வருந் கிறோம். உயிர் பிரிகின்ற கடை நேரத்தில் கூட, தனயனைக் காணு தந்தையார் உள்ளம் எத்தனை பாடுபட்டதோ! காங்கிரஸ் ஆட் யின் அல்லலுக்கு ஆட்பட் அவர் தம் குடும்பத்தாருக் பெரியவரின் பிரிவு மிக மிக வரு தத்தைத் தந்திருக்கும். அவர்கள வருத்தத்தில் நாமும் ப கொள்வதோடு, தோழர் கந்தசா யின் சகோதரர்களுக்கும், குடும் தாருக்கும் நமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.